27th February 1964] [Mr. Speaker]

Regarding the adjournment motion of Sri M. Kalyanasundaram, it is the same thing. . .

SRI M. KALYANASUNDARAM : One submission, Sir.

நான் சொல்லக்கூடிய சம்பவங்களைப் பற்றி--குறிப்பிட்டு ஒன்றைச் சொல்லவில்லை என்றாலும், போலீஸார் தம் கடமையில் இருந்து தவறி இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளேன். அதை திருத்தத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி யிருக்கிறேன். இது

"something more than ordinary administration of law."

MR. SPEAKER : Regarding the adjournment motion given by the hon. Member Sri M. Kalyanasundaram, I have to say that if anybody attacks or attempts to attack anybody else and if the complaint is proved, action must be taken. According to the reports, some people have been arrested and the matter is pending before the Court. There is no clear evidence before the House now to show that there is any failure on the part of Government so specific as to attract the provisions of an adjournment motion. Consent to that motion also is therefore withheld.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே உங்களுடைய தீர்ப்புக்குத் தலை வணங்குகிறோம். ஆனால் ஆளும் கட்சிக்குச் சார்பாகவும் எதிர்க் கட்சிக்குப் பாதகமாகவும் ஆட்சியினர் காவல் துறையினரைப் பயன் படுத்தியதை உணருவதன் காரணமாக, ஆட்சியினருக்கு எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் வெளி நடப்பு செய்வதைத் தவிர வேறு வழி இல்லையென்பதால் வெளி நடப்பு செய்கிறோம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

The Members belonging to the D.M.K. Party staged a walk-out.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரி விஷயங்களை விவாதிப்பதன் மூலம்தான் உண்மையிலேயே நியாய அநியாயத்தை வரையறுக்க முடியும் என்று நம்புகிற வர்கள் நாங்கள். அந்த முறையிலே விவாதிப்பதற்கு வழி இல்லாமல், ஆளும் கட்சியினர் செய்வதைக் கண்டிக்கும் முகத்தான் நாங்களும் வெளியேறுகின்றோம்.

The Members belonging to the Swatantra Party also staged a walk-out.

(3) PREVENTION OF RECURRENCE OF CLASH IN URAPPANUR.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of an adjournment motion. May I know how the matter comes within the scope of an adjournment motion?

[27th February 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற வருஷம் இதே சமயத்தில்தான் உரப்பனூரில் தகராறு ஏற்பட்டு போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இப்போதும் மீன் பிடிப்பு சம்பந்தமாகத் தகராறுகள் இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, போன வருஷம் மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் இப்போதே தலையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று நான் கூற விரும்புகிறேன். **recent occurrence**-ஆக இருக்க வேண்டும். ஆனால், இந்த விஷயம் ஒரு வருஷத்திற்கு முன்னால் நடந்தது. ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொல்லி ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவருவது கிடையாது. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்—அரசாங்க அதிகாரிகள், கலெக்டர்கள் உட்பட இதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரு கட்சிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சென்ற ஆண்டு நடந்த சம்பவத்தை வைத்து தற்போது பிரேரணை கொண்டு வந்திருப்பது ஒத்திவைப்புப் பிரேரணையின்கீழ் வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் இதை வற்புறுத்தவில்லை.

(4) FAILURE TO SUPPLY ADEQUATE RICE TO MADRAS CITY.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion regarding the failure of the Government to take steps to make available adequate supply of rice to Madras City, resulting in sudden increase in cost of meals and other edibles in the City hotels.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கும் பல உபத்திரவங்களில் முக்கியமான உபத்திரம் ஹோட்டல்களில் ஒரு சாப்பாட்டின் விலை ஏற்கனவே இருந்ததை விட 20 நயா பைசா, 30 நயா பைசா ஏறிவிட்டதாகும். சாப்பாட்டின் விலை அதிகமாகி விட்டதோடு தரமும் குறைந்து விட்டது. தற்போது ஹோட்டல்காரர்கள் விலையை ஏற்றிவிட்டார்கள். ஒரு சமயம் நாளைக்கு அரிசி விலை இறங்கினால் கூட ஹோட்டல்காரர்கள் விலையை இறக்கப் போவதில்லை. அரிசி தாராளமாகக் கிடைக்க வில்லை போன்ற பல காரணங்களைச் சொல்லி விலையை ஏற்றிவிட்டார்கள். இதனால் வெளியூரில் இருந்து வருகிற